# மார்ச் – 12 – செவ்வாய்

**துணைவேண்டி நான் ஆண்டவரை மன்றாடினேன்: அவர் எனக்கு மறுமொழி பகர்ந்தார்: திபா. 34:4**

## முதல் வாசகம்: ஏசாயா 55 : 10 – 11

ஆண்டவர் கூறுவதாவது : மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச்செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை.அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை.

**பதில்பாடல்:** நீதிமான்களை இறைவன் அனைத்துத் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கின்றார்.

## நற்செய்தி : மத்தேயு 6 : 7 – 15

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : மேலும் நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம் மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்" விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ("ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.") மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்.மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்" என்றார்.

**தியானம்:** கடவுள் நமது தேவைகளை அறிந்தவராயிருக்கிறார். அப்ப நமது தேவைகளை அறிந்திருக்கிற கடவுளிடத்தில், நாம் நமது தேவைகளுக்காக மீண்டும், மீண்டும் செபிக்க வேண்டும். நாம், கடவுளுக்கு தெரிந்த நமது ஏக்கங்களை, மீண்டும், மீண்டும் சொல்வதனால், மீண்டும் எமது வேண்டுதல் விண்ணப்பங்கள் இறைவனிடத்தில் உறுதிப்படுத்தபடுகின்றது. எமது விசுவாசமும் தளர்ந்த போகாமல் உறுதிப்படுத்தபடுகின்றது. செபம் என்பது என்ன? கடவுளைப் போற்றுவதும், அவருக்கு நன்றி செலுத்துவது மட்:டுமல்ல எமது தேவைகளை அவரிடம் எடுத்து சொல்லி உரையாடுவது தான் செபம். இறைவனுக்கும், எமக்கும் இடையில் ஏற்படும் உறவு பரிமாற்றம் தான் செபமாகும். மக்கள் பல திருத்தலங்களை நாடிச் செல்கிறார்கள். எதற்காக செல்கிறார்கள்? தங்களது விண்ணப்பங்கள் எப்படியாவது கடவுளால் கேட்கப்பட வேண்டும் என்பதற்காக. பல நேர்ச்சைகளையும் இதற்காகச் செய்கிறார்கள். ஆனால், கடவுள் சந்நிதியில் நாம் வருகிறபோது, அவரை போற்றிப்புகழ்ந்து உரையாடுவது மிகவும் சிறப்பான செபமாகும். நாம் எண்ணிலடங்கா வார்த்தைகளைச் சொல்ல வேண்டும் என்று கடவுள் எதிர்பார்க்கவில்லை. நாம் அவரது மாட்சிமையை, மகத்துவத்தை புகழ்ந்துபாடி உறவுநிலையை பேணுவதே நிறைவானது. பலவேளைகளில் நமது செபம், பல வார்த்தைகளைக் கொண்டு அமைந்திருக்கிறது. எந்த அளவுக்கு வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோமோ, அந்த அளவுக்கு அது சிறந்த செபம் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், அது தவறான பார்வை. நமது செபம் எளிய செபமாக, எண்ணிக்கையில் குறைந்த வார்த்தைகளைக் கொண்ட செபமாக இருக்க வேண்டும். கடவுளைப்போற்றுவதாகவும், புகழ்வதாகவும், தூய்மையாக அமைய வேண்டும்.